<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:-திரு.கே.கமலநாதன்,பி.எஸ்.,பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
(கூடுதல் பொறுப்பு)
சிதம்பரம்.
2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 08-ம் நாள் புதன்கிழமை

*<u>நி.வி.எண். 129/2022 In நி.ம.எண்.47/2022 In</u>*
*<u>அ.வ.எண்: 40/2009</u>*

1. ராமச்சந்திரன்
2. கோபாலகிருஷ்ணன் ..மனுதாராகள்/1,3எதிர்மனுதாரர்கள்

எதிர்

கிருஷ்ணமூர்த்தி ...எதிர்மனுதாரர்/மனுதாரர்

இந்த மனுவானது 1.3.2023 அன்று என்முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.ஏ.எஸ்.வேல்முருகன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.ஏ.குபேரன், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பையும் கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>உத்தரவு</u>

16.11.2022ல் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 106ன் கீழ் தாக்கல் செய்த மனு.

*<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>*

இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள் என்றும் சுவாதீனத்திற்கு உத்தரவு வேண்டி இந்த எதிர்மனுதாரர் அளித்துள்ள நிறைவேற்று மனுவில் கடந்த 16.11.2022ல் வாய்தா இருந்து தங்களது வருகை இன்மையால் எதிர்வரில்லா உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் இந்த வழக்கில் கடந்த 15.11.2022ல் தனக்கு ஏற்பட்டிருந்த காய்ச்சல் காரணமாக தன்னால் நீதிமன்றத்திற்கு வர இயலாமல் போய்விட்டது என்றும் 1ம் மனுதாரர் வயது 80 ஆகும் என்றும், அவரால் நடக்க முடியாத நிலை இருப்பதால் அவருக்காகவும் தான்தான் வழக்கை நடத்தி வருவதாகவும் தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ நீதிமன்றத்திற்கு வராமலில்லை என்றும் இயலாமை மட்டுமே காரணம் என்றும், இனிவரும் காலங்களில் இது போன்ற தவறுகள்

ஏற்படாமலிருக்க இதன் மூலம் தான் உறுதியளிப்பதாகவும், கடந்த 16.11.2022ல் பிறப்பிக்கப்பட்ட எதிர்வரில்லா உத்தரவை ரத்து செய்ய தவறினால் அதனால் தங்களுக்கு ஏற்படும் பேரிழப்பை வேறு எந்த வகையிலும் ஈடு செய்ய இயலாது என்றும், எனவே 16.11.2022ல் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. *<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்:-</u>*

மனுதாரா தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஏற்பதற்கில்லை என்றும், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த மனுவுடன் நிறைவேற்று மனு மீது மறுப்புரை தாக்கல் செய்யாமல் இம்மனு மட்டும் முன்னிட்டுள்ளது உள்நோக்குடையது என்றும் மனுதாரர் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார் என்றும் இவைகளை மனுதாரர்களே மெய்ப்பிக்கும் கடமையுடையவர் என்றும் வேண்டுமென்றோ இந்நிறைவேற்று மனுவினை காலங்கடத்திட பொய்யான தகவல்களை குறிப்பிட்டு நிறைவேற்று மனுவின் மீதான மறுப்புரை தாக்கல் செய்யாமல் முன்னிட்டுள்ளது ஏற்புடையதல்ல என்றும், நிறைவேற்று மனுவின் அசல் வழக்கு நீதிமன்றத்தில் 40-2009 என கோப்பில் எடுக்கப்பட்டு முழு விசாரணைக்கு பின்னர் கடந்த 19.10.2012 தேதியல் தீர்ப்பு மற்றும் தீர்ப்புரை பகரப்பட்டது என்றும், உடனே இந்த எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து அது நிறைவேற்று மனு 102-2013 என கோப்பில் எடுக்கப்பட்டு இந்த மனுதாரர்கள் சார்பு நீதிமன்றத்தில் அப்பீல் ஏ.எஸ் 35-2014 தாக்கல் செய்ததால் தள்ளுபடியானது என்றும் முதல் மேல்முறையீடு முழு விசாரணைக்கு பின்னர் கடந்த 4.1.2014 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த மனுதாரர்கள் 2வது மேல்முறையீடு செய்து அது அப்பீல் நெ.825-2014 என கோப்பில் எடுக்கப்பட்டு முழு விசாரணைக்கு பின்னர் கடந்த 18.9.2021 தேதியில் நிபந்தனைகளுடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது இந்த எதிர்மனுதாரர் கிருஷ்ணமூர்த்திக்கு சுமார் 80 வயதுக்கு மேலான நிலையில் மேற்படி தீர்ப்புகளின் சொத்துக்களை அடைய வேண்டி இந்த நிறைவேற்று மனுவை நீதிமன்றத்தில் 2வதாக முன்னிட்டுள்ள நிலையில் வேண்டுமென்றே காலங்கடத்தி அலைகழிக்க வைத்து மீளவும் ஏமாற்று வேலைகளின்ல் இந்த மனுதாரர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் எனவே மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர்

தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் மனுவில் இந்த மனுதாரர்கள் மீது 16.11.2022ல் ஒருதலைபட்ச உத்தரவை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு “இந்த மனுவுடன் நிறைவேற்று மனு மீது மறுப்புரை தாக்கல் செய்யாமல் இம்மனு மட்டும் முன்னிட்டுள்ளார் என்றும் நிறைவேற்று மனுவின் அசல் வழக்கு நீதிமன்றத்தில் 40-2009 என கோப்பில் எடுக்கப்பட்டு முழு விசாரணைக்கு பின்னர் கடந்த 19.10.2012 தேதியில் தீர்ப்பு பகரப்பட்டது என்றும், உடனே இந்த எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து அது நிறைவேற்று மனு 102-2013 என கோப்பில் எடுக்கப்பட்டு இந்த மனுதாரர்கள் சார்பு நீதிமன்றத்தில் அப்பீல் ஏ.எஸ் 35-2014 தாக்கல் செய்ததால் தள்ளுபடியானது என்றும் முதல் மேல்முறையீடு முழு விசாரணைக்கு பின்னர் கடந்த 4.1.2014 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த மனுதாரர்கள் 2வது மேல்முறையீடு செய்து அது அப்பீல் நெ. 825-2014 என கோப்பில் எடுக்கப்பட்டு முழு விசாரணைக்கு பின்னர் கடந்த 18.9.2021 தேதியில் நிபந்தனைகளுடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரரை வேண்டுமென்றே காலங்கடத்தி அலைகழிக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்” என ஆட்சேபனை செய்திருந்தாலும் மனுதாரரை பொறுத்தவரையில் தங்களது தரப்பு வழக்கை நிருபணம் செய்ய அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதுதான் நீதிக்கு உகந்ததாக இருக்கும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. ஆனால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களுக்கு மனுதாரர் அவர்களுக்கு இம்மனுவின் செலவுத்தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்.

இறுதியாக, இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.500ஐ 15.3.2023 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க 15.3.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 8.3.2023ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K KAMALANATHAN

Digitally signed by K KAMALANATHAN
Date: 2023.04.26 10:50:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)